# அகழ்ந்திடுவார் தம்மை என்றும்

அகழ்ந்திடுவார் தம்மை என்றும்
அன்புடன் நிலம் தாங்கும் - 2
என்ன தான் குறைகள் செய்தாலும்
உன் இதயம் தாங்கும்
என்றும் எனைத் தாங்கும் - 2

**1)**
அழுதாலும் உன் கரம் தேற்றும்
மகிழ்ந்தாலும் அது உன் நிழலில் - ( 2 )
உன்னை நான் மறந்து வாழ்ந்தாலும்
வாழ்வதும் உன்னாலே
வல்லவன் நீயின்றி
என் இதயத்தில் நிறைவில்லை - ( 2 )
உந்தன் தாளில் கூடும்
பல கோடிப் பூவிதழில் நானும் ஒன்றாவேன்
உன் திருநாளில் என் உள்ளம்
மங்கலம் பாடும் தன் இல்லம்
உன் நினைவாலே தெய்வீகம் வாழ்வு பெறும்

**2)**
ஆசைகளில் தடுமாறி அதில்
விழுந்தால் எடுப்பதும் உன்னுருவே - 2
துன்பம் நான் அடைந்து சோர்ந்தாலும்
வாடுவதும் நீயே
என்னிடம் வலுவில்லை - உன்
பலமின்றிக் கதியில்லை - (2)
வரும் காலம் உன் அடியில்
வாழ்வும் உன் மடியில் நானும் உன் சந்நிதியில்
உன் திருவுள்ளம் என் இல்லம்
உன் திரு சொல்லே என் சொந்தம்
உன் உறவொன்றே என் இன்பம் என்றென்றும்